# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

Communication and Media Studies - Syllabi for grades 12-13

## பாட விதானம்

## தரம் 12-13

(2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படுவதற்கானது)

சிங்கள மொழித் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
தரம் - 12-13
பாட விதானம்

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சிங்கள மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 4 |
| அறிமுகம் | 5-6 |
| தேசிய இலக்குகள் | 7 |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | 8-9 |
| பாடத்தின் நோக்கங்கள் | 10 |
| தேசிய பொது நோக்கங்கள் மற்றும் பாடவிடய நோக்கங்களுக்கு இடையேயான தொடர்பு | 11 |
| தவணைரீ தியான பாடசாலை வேலை திட்டம் | 12 |
| பாடவிதானம் | 13-37 |
| பாடசாலைக்கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் | 38 |
| கணிப்பீடும் மதிப்பீடும் | 39 |
| பாடவிதானக் குழு | 40 |

# முன்னுரை

இலங்கையில் பாடசாலைப் பாடத்திட்டத்தில் க.பொ.த. உயர் தரத்திற்குரிய பாடங்களுள் ஒன்றான தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்திற்கான பாடவிதானம் இதுவாகும். புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி இப் பாடவிதானம் 2018 இலிருந்து அமுல்படுத்தப்படுகின்றது.

இப் பாடவிதானத் தயாரிப்பின் போது உள்ளூர் மற்றும் உலக நாடுகளில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடம் தொடர்பில் பின்பற்றப்பட்டுவரும் பாடவிதானங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. யுனெஸ்கோ அமைப்பினால் 1982 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குருன்வெல்ட் பிரகடனம் மற்றும் 2007 ஆம் ஆண்டு இளைஞர்களுக்கு ஊடகக் கல்வி வழங்குதல் தொடர்பில் வெளியிடப்பட்ட பரிஸ் நிகழ்ச்சி நிரல் என்பன வழிகாட்டல்களாக அவதானிக்கப்பட்டன.

க.பொ.த. உயர் தரப் பரீட்சை முடிந்ததன் பின்னர் மாணவர்கள் உயர் கல்வியைத் தெரிவு செய்யும் அல்லது தொழிற்கல்வியைத் தெரிவு செய்யும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வினைத்திறன்மிக்க தொடர்பாடுனராகச் செயற்படவும் வாழ்க்கை முழுவதும் ஓர் பொறுப்புடைய பிரஜையாகச் செயற்படவும் தேவையான கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறைசார் அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் பழக்கவழக்கங்கள் விருத்தி செய்யவும் நடத்தைசார் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இப் பாடத்தின் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் மற்றும் விடய உள்ளடக்கம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இப் பாடவிதானத்தைச் செயற்படுத்தத் தேவையான வழிகாட்டல் உள்ளடங்கிய ஆசிரியர் வழிகாட்டிகள் இரண்டு 12 மற்றும் 13 ஆகிய தரங்களுக்காக அறிமுகம் செய்யப்படவுள்ளது. அதன்படி சிறந்த முறையில் பரீட்சை எழுதி வெற்றிபெறவும் இப் பாட வழிகாட்டி உறுதுணையாக அமையும்.

# அறிமுகம்

தொடர்பாடல் ஓர் அடிப்படை மனிதச் செயற்பாடாகும். கருத்துக்கள், தகவல், அறிவு என்பன பரிமாற்றிக்கொள்வது என்பது தொடர்பாடலின் எளிய விளக்கமாகும். தகவல் பரிமாறிக்கொள்ளாது ஒரு மனிதனால் வாழ முடியாது. அவ்வளவிற்குத் தொடர்பாடலானது மனித இடைத்தொடர்புகளை ஏற்படுத்தும் ஓர் காரணியாக மாறியுள்ளது. எளிய குறியீடு மற்றும் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட மனிதத் தொடர்பாடல் செயன்முறையானது சமகாலத்தில் உயர் தொடர்பாடல் கருவிகளின் மூலமாகச் சிக்கல் நிறைந்ததொன்றாகப் பரிணமித்துள்ளது. எல்லையின்றியதாகப் பரவலடையும் தகவல்களால் மனிதன் தனக்குத் தேவையான மற்றும் பொருத்தமான தகவலைத் தெரிவு செய்வதில் சிக்கலுக்குள்ளாகியுள்ளான்.

குழந்தைகளும் இளைஞர்களும் எல்லையற்ற தகவல்களினால் எதைத் தெரிவு செய்வது என்பது பற்றி அறியாதுள்ளனர். ஊடகங்கள் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மீது அதிக தாக்கத்தைச் செலுத்துகின்றன என்றும் அவர்கள் அதிகளவு ஊடகங்களைச் சார்ந்தே இயங்குகின்றனர் என்றும் உலக ஆராய்ச்சியாளர்கள் தம் ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளனர். இதற்குப் பரிகாரம் குழந்தைகளை ஊடக நுகர்விலிருந்து தவிர்ப்பது அல்ல. அதற்காகச் செய்யக் கூடியது, அவர்களை விமர்சனரீதியான பெறுநர்களாக மாற்றுவதற்குத் தேவையான அறிவை வழங்குவதேயாகும். தொடர்பாடல் கருவிகள் மூலமாகக் குழந்தைகள் மந்த நிலையில் செயற்படுவதைத் தவிர்த்து ஊடக விளக்க அறிவை வழங்குவதன் மூலமாக அவர்களைச் செயற்படு பிரஜைகளாக மாற்றுவதை நோக்காகக் கொண்டு இப் பாடத்தின் தலைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் தொடர்பான அடிப்படைக் கருத்துக்கள் ஓர் ஒழுங்குமுறையில் மாணவரது அறிவு மட்டத்திற்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இப் பாடம் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் என்று இரண்டு பிரிவுகளுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விடயத் தலைப்புகளைக் கற்பதன் மூலமாக மாணவர் பெற்றுக்கொள்ளும் தேர்ச்சி மாணவரது செயற்பாடுகள் மூலமாக மதிப்பிடப்படும்.

## க.பொ.த (உயர் தரம்) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தைப் பின்பற்றும் மாணவர் பெற்றுக்கொள்ளும் தேர்ச்சிகள்

**தொடர்பாடல் Communication**

- சிறந்த தொடர்பாடுனராகுதல்
- மொழியைச் சிறந்த முறையில் பயன்படுத்தல்
- படைப்பாக்கத்திறன் மிக்கவராதல்
- நட்புறவுடன் பழகுதல்
- சமனிலை ஆளுமையுடையவராதல்
- தலைமைத்துவப் பண்புகள்அவிருத்தியடைதல்
- குழுவாக இயங்கக்கூடியவராயிருத்தல்
- ஒழுங்கமைக்கும் சக்தியுடையவராயிருத்தல்
- தொழில்சார், தலைமைத்துவ, தொடர்பாடல் திறனுடையவராயிருத்தல்
- பண்பாட்டுப் பல்வகைமை பற்றிய அறிவுடையவராயிருத்தல்
- சமத்துவம், நல்லுறவுடன் செயற்படுபவராயிருத்தல்
- தொலைநோக்குச் சிந்தனையுடையவராயிருத்தல்
- ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பவராக இருத்தல்

**மாணவர் விவரம் Students' Profile**

- தொடர்பாடல் தேர்ச்சி
- ஊடக விளக்க அறிவு
- விமர்சனத்திறன்
- மொழிப்பாவனை
- பண்பாடு
- தாக்கம்
- தகவல் பெற்றுக்கொள்ளல்
- அபிவிருத்தி
- விதிமுறைகள்
- ஜனநாயகம்

**ஊடகக் கற்கைகள் Media Studies**

- பல்வேறு ஊடகங்கள் மற்றும் அவற்றின் இயல்புகளை அறிதல்
- பல்வேறு ஊடகங்களுக்கிடையேயான இடைத் தொடர்பை அறிதல்
- ஊடக உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாயிருத்தல்
- ஊடக மொழி பற்றிய அறிவு
- ஊடகத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யக் கூடியதாயிருத்தல்
- ஊடகத்தாக்கம் பற்றிய அறிவுடையவரா யிருத்தல்
- பண்பாட்டில் ஊடகங்கள் செலுத்தும் தாக்கம் பற்றி அறிந்திருத்தல்
- ஊடக வரையறைகள் பற்றிய அறிவு (ஊடக ஒழுக்க நெறி மற்றும் கொள்கைகள்) உடைய வராக இருத்தல்
- எளிய ஊடகத் தகவலொன்றை உருவாக்கக் கூடியதாயிருத்தல்
- ஊடக அபிவிருத்திக்குப் பங்காற்றுதல்

இதன்படி, புதியதோர் நோக்கத்தில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தைப் பின்பற்றவும் அதன் மூலமாக வெற்றிகரமானதோர் தொடர்பாடுனராக உலகளாவியரீதியில் காலடி எடுத்துவைக்கத் தகுந்த சக்திமிக்க சமனிலை ஆளுமையுடைய ஓர் பிரஜையாகத் தேவையான வழிகாட்டல் இப்பாட விதானத்தின் மூலம் ஏற்படுத்தப்படும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)***

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**I.** தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழிநுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவற் தொழிநுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவற் தொடர்பாடற் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**II.** ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.

- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்

- மன எழுச்சி, நுண்ணறிவு.

**III.** சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத் தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற்றொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV.** வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடுதல்.

**V.** சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI.** ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII.** கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும், வெற்றியையும் பெறச் செய்தலும்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)

## தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தின் நோக்கங்கள்

1 . தொடர்பாடல் கற்கைத் துறையின் ஆரம்பம், வளர்ச்சி, துறைசார் பின்புலம் மற்றும் புதிய போக்குகள் பற்றிய விளக்கம் பெறல்.

2 . விமர்சனரீதியாக, ஊடகங்களை நுகரத் தேவையான ஊடக விளக்க அறிவு ஞானத்தை மாணவரிடையே வளர்த்தல்.

3 . கோட்பாட்டு ரீதியான மற்றும் பிரயோக ரீதியான பாடவிடயங்களைத் தமது வாழ்க்கைக் கோலத்தில் உதாரணம் காட்டி ஓர் சிறந்த தொடர்பாடுனராகுதல்.

4 . வெற்றிகரமான தொடர்பாடல் மூலம் ஆளிடைத் தொடர்புகளை மேம்படக் கொண்டு செல்வதற்குத் தேவையான சமூக நல்லுறவை மதிக்கும் ஓர் சமூகப் பிராணியாகுதல்.

5 . சுதந்திரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்க அனைவருக்கும் உள்ள உரிமை மற்றும் அதன் எல்லைகளுக்கு மதிப்பளிக்கும் ஜனநாயகப் பிரஜையாதல்.

6 . சுதேசிய, தேசிய மட்டத்தில் ஊடகப் போக்குகள் மற்றும் விசேட இயல்புகள் பற்றிய அறிவுடன் எதிர்காலச் சவால்களுக்கு முகம்கொடுக்கத் தேவையான சக்தி மற்றும் தேர்ச்சியினை வளர்த்துக் கொள்ளல்.

7 . படைப்பாக்கரீதியில் ஊடகத் தகவல்களைத் தயாரிக்கும் மற்றும் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல் பெறல்.

8 . உள்நாட்டு அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட தொடர்பாடல் காரியங்களை இனங்கண்டு அவற்றிற்கு உடனடிப்பின்னூட்டல் வழங்கும் பிரஜையாதல்.

| தேசிய பொது நோக்கங்கள் மற்றும் பாடவிடய நோக்கங்களுக்கு இடையேயான தொடர்பு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடவிடய நோக்கங்கள் | தேசிய பொது நோக்கங்கள் | | | | | | | |
| | | I. | II. | III. | IV. | V. | VI. | VII. | VIII. |
| 1. | தொடர்பாடல் கற்கைத் துறையின் ஆரம்பம், வளர்ச்சி, துறைசார் பின்புலம் மற்றும் புதிய போக்குகள் பற்றிய விளக்கம் பெறல். | x | x | | x | | | x | x |
| 2. | விமர்சனரீதியாக ஊடகங்களை நுகரத் தேவையான ஊடக விளங்கறிவு ஞானத்தை மாணவரிடையே வளர்த்தல். | x | x | x | | x | | | |
| 3. | கோட்பாட்டு ரீதியான மற்றும் பிரயோக ரீதியான பாடவிடயங்களைத் தமது வாழ்க்கைக் கோலத்தில் உதாரணம் காட்டி ஓர் சிறந்த தொடர்பாடுனராகுதல். | | x | | x | x | x | x | x |
| 4. | வெற்றிகரமான தொடர்பாடல் மூலம் ஆளிடைத் தொடர்புகளை மேம்படக் கொண்டு செல்வதற்குத் தேவையான சமூக நல்லுறவை மதிக்கும் ஓர் சமூகப் பிராணியாகுதல். | x | x | x | x | | | x | x |
| 5. | சுதந்திரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்க அனைவருக்கும் உள்ள உரிமை மற்றும் அதன் எல்லைகளுக்கு மதிப்பளிக்கும் ஜனநாயகப் பிரஜையாதல். | x | | x | | | | x | x |
| 6. | சுதேசிய, தேசிய மட்டத்தில் ஊடகப் போக்குகள் மற்றும் விசேட இயல்புகள் பற்றிய அறிவுடன் எதிர்காலச் சவால்களுக்கு முகம்கொடுக்கத் தேவையான சக்தி மற்றும் தேர்ச்சியினை வளர்த்துக் கொள்ளல். | | x | | | | x | x | x |
| 7. | படைப்பாக்கரீதியில் ஊடகத் தகவல்களைத் தயாரிக்கும் மற்றும் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல் பெறல். | x | | x | x | x | | | |
| 8. | உள்நாட்டு அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட தொடர்பாடல் காரியங்களை இனங்கண்டு அவற்றிற்கு உடனடிப் பின்னூட்டல் வழங்கும் பிரஜையாதல். | | x | | | x | x | x | |

## தவணைரீதியான பாடசாலை வேலைத் திட்டம்

| தரம் | வாரம் | தேர்ச்சி மட்டம் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| **12** | **I** | 1.1, 1.2, 1.3, 2.1, 2.2, 2.3, 2.4, 2.5 | 100 |
| | **II** | 3.1, 3.2, 3.3, 4.1, 4.2, 4.3, 4.4 | 110 |
| | **III** | 5.1, 5.2, 5.3, 6.1, 6.2, 6.3, | 120 |
| **13** | **I** | 7.1, 7.2, 7.3, 7.4, 8.1, 8.2, 8.3, 8.4, 8.5, 8.6, 8.7 | 100 |
| | **II** | 9.1, 9.2, 9.3, 9.4, 10.1, 10.2, 10.3 | 100 |
| | **III** | 11.1, 11.2, 11.3, 12.1, 12.2 | 70 |

# பாட விதானம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம், வீச்சு, அதன் துறை சார் பின்புலம் மற்றும் அதனைக் கற்பதன் அவசியம் முதலானவை பற்றிய அறிவுடன் செயற்படுவார். | 1.1 துறைசார் பாடமாகத் தொடர் பாடல் கற்கையின் ஆரம்பம், வீச்சு, அதனைக் கற்பதன் அவசியம் முதலானவற்றை இனங்கண்டு முன்வைப்பார். | 1. **தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம் மற்றும் வீச்சு**<br>• தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம்<br>• தொடர்பாடல் கற்கையின் வீச்சு<br>• தொடர்பாடல் கற்கையின் அவசியம் | • துறைசார் பாடமாகத் தொடர் பாடல் கற்கையின் ஆரம்பம் பற்றித் தெளிவுபடுத்துவார்<br>• தொடர்பாடல் கற்கையின் வீச்சுப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்<br>• தொடர்பாடல் கற்கையினை ஓர் பாடமாகக் கற்பதன் அவசியத்தை விளக்குவார். | 05 |
| | 1.2 இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை அறிமுகம் செய்தல் மற்றும் அதற்குப் பின்புலமாக அமைந்த காரணிகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார். | • இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை அறிமுகம் செய்தல். | • இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை அறிமுகம் செய்தல் பற்றி விபரிப்பார். | 05 |
| | 1.3 தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கையினை ஓர் துறைசார் பாடமாகக் கற்பதன் அவசியத்தை விளக்குவார். | • தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தை அறிமுகம் செய்தல்.<br>• தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தைப் பின்பற்று வதன் அவசியத்தை விளக்குதல். | • தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தை அறிமுகம் செய்வார்.<br>• தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தைப் பின்பற்று வதன் அவசியத்தை விளக்குவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 தொடர்பாடல், அதன் இயல்பு, அடிப்படைக் கூறுகள் மற்றும் பணிகள் பற்றிய விமர்சனரீதியான அறிவுடன் அவற்றை அன்றாட வாழ்க்கையில் தொடர்பாடல் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றப் பயன்படுத்துவார். | 2.1 தொடர்பாடல் என்றால் என்ன என இனங்காண்பார். | **2. தொடர்பாடல் அடிப்படை**<br>• தொடர்பாடல் என்றால் என்ன என இனங்காணல் | • தொடர்பாடல் என்றால் என்ன என இனங்கண்டு அதன் அர்த்தத்தைத் தெளிவுபடுத்துவார். | 04 |
| | 2.2 தொடர்பாடலின் இயல்பை விளங்கி அதனைத் தெளிவுபடுத்துவார் | • தொடர்பாடலின் இயல்பு<br>✓ குறிக்கோளைக் கொண்டது.<br>✓ குறியீட்டுப் பாவனையுடையது.<br>✓ சந்தர்ப்ப சூழ்நிலைக்கு இயைவானது<br>✓ செயன்முறை<br>✓ பலவிதமானது<br>✓ ஓர் சக்தி | • தொடர்பாடலின் இயல்பை விபரிப்பார். | 24 |
| | 2.3 தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப் படைக் கூறுகளைப் பகுப்பாய்வார். | • தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகள்<br>✓ தொடர்பாடுநர் (அனுப்புநர்)<br>✓ தகவல்<br>✓ ஊடகம்<br>✓ பெறுநர் | • தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகளை இனங் கண்டு முன்வைப்பார்.<br><br>• தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகளைத் தனித் தனியே விளக்குவார். | 18 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள |
|---|---|---|---|---|
| | | ✓ தடை<br>✓ பின்னூட்டம்<br>✓ சந்தர்ப்பம்<br>✓ அனுபவக் களம்<br>✓ தாக்கம் | • தொடர்பாடல் செயற்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு அடிப் படைக்கூறுகள் பற்றிய அறிவு அவசியம் என்பதை அறிந்து அது தொடர்பான கருத்துக் களை வெளியிடுவார். | |
| | 2.4 தொடர்பாடல் என்றால் என்ன என வரைவிலக் கணப்படுத்து வார். | • தொடர்பாடல் பற்றிய வரை விலக்கணம்<br>1. வில்பர் ஷ்ராம்<br>2. ஹரோல்ட் லாஸ்வெல்<br>3. குளொட் ஷனொன் மற்றும் வொரன் வீவர் | • தொடர்பாடல் என்றால் என்ன என்பதை வரைவிலக் கணங்களூடாக விளக்குவார். | 10 |
| | 2.5 தொடர்பாடலின் அடிப்படைப் பணிகள் பற்றிய விளக்கத்துடன் அவற்றை விபரிப்பார். | • தொடர்பாடலின் பணிகள்<br>✓ தகவல் வழங்குதல்<br>✓ அறிவுரை வழங்குதல்<br>✓ தூண்டல் செயற்பாடு<br>✓ பொழுதுபோக்களித்தல்<br>✓ கண்காணித்தல்<br>✓ விளக்கமளித்தல்<br>✓ இடைத் தொடர்புகளை ஏற்படுத்தல்<br>✓ சமூகமயமாக்கல் | • தொடர்பாடலின் பணிகள் பற்றி உதாரணங்கள் காட்டி விபரிப்பார். | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள |
|---|---|---|---|---|
| 3.0 தொடர்பாடல் வடிவங்கள் மற்றும் மாதிரிகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவுடன் அவற்றைச் சந்தர்ப்பத்திற் கேற்பப் பயன் படுத்துவார். | 3.1 தொடர்பாடல் வகைகள் பற்றிய அறிவுடன் அவற்றைச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன் படுத்துவார். | **33. அடிப்படைத் தொடர்பாடல் வகைகள், வடிவங்கள் மற்றும் மாதிரிகள்**<br><br>• தொடர்பாடல் வகைகள்<br>✓ ஆளுள் தொடர்பாடல்<br>✓ ஆளிடைத் தொடர்பாடல் (நபரிடைத் தொடர்பாடல்)<br>✓ சமூகத் தொடர்பாடல்<br>✓ பொதுசனத் தொடர்பாடல்<br>✓ வெகுசனத் தொடர்பாடல்<br>✓ மெய்நிகர் (Virtual) தொடர்பாடல் | • தொடர்பாடல் வகைகளைப் பெயரிடுவார்.<br>• தொடர்பாடல் வகைகளை வெவ்வேறாகப் பெயரிடுவார்.<br>• தொடர்பாடல் வகைகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான கருத்துக் களைப் பிரயோகம் செய்வதன் மூலமாகத் தொடர்பாடலை வெற்றிகரமானதாக்க முடியும் என உணர்ந்து செயற்படுவார்.<br>• ஆளுள் தொடர்பாடலின் இயல்பு மற்றும் செயற்பாட்டைப் பகுப் பாய்வு செய்வார்.<br>• ஆளிடைத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்கு வார்.<br>• ஒழுக்கமான முறையில் ஆளிடைத் தொடர்பாடலில் ஈடுபடுவார்.<br>• கடமை மற்றும் பொறுப்புடன் சமூகத் தொடர்பாடலில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை இனங்கண்டு இதன்படி செயல் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள |
|---|---|---|---|---|
| | | | படுவார்.<br>• சமூகத் தொடர்பாடலின் வடி வங்கள் மற்றும் அதன் விசேட இயல்புகளை அறிந்து அவற்றை முன்வைப்பார்.<br>• சமூகத் தொடர்பாடல் என்றால் என்ன என இனங்கண்டு அதன் படி செயற்படுவார்.<br>• பொதுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்கு வார்.<br>• வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விபரிப்பார்.<br>• மெய்நிகர் தொடர்பாடலின் வடிவங்கள் மற்றும் அதன் விசேட இயல்புகளை அறிந்து அவற்றை முன்வைப்பார்.<br>• தொடர்பாடல் வகைகளின் பிரயோக அவசியத்தை மற்றும் வினைத்திறனைப் பகுப்பாய்வு செய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.2 தொடர்பாடல் வடிவங்கள் பற்றிய தெளிவுடன் அவற்றைப் பயன்படுத்துவார். | • தொடர்பாடல் வடிவங்கள்<br>✓ வாய்மொழி/வாய்மொழி யற்ற<br>✓ பேச்சு/அபிநயம்<br>✓ எழுத்து/கட்புல/செவிப்புல/ பேச்சு<br>✓ முறைசார்/முறைசாரா | • வெவ்வேறு தொடர்பாடல் வடி வங் களை இனங்காண்பார்.<br>• தொடர்பாடல் வடிவங்கள் பயன் படும் விதத்தை உதாரணம் காட்டி விபரிப்பார்.<br>• வெவ்வேறு தொடர்பாடல் வடி வங்கள் பற்றிய அறிவுடன் தம் முன்வைப்புகளை மேற்கொள்வார். | 10 |
| | 3.3 தொடர்பாடல் மாதிரிகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்வார். | • தொடர்பாடல் மாதிரிகள்<br>➢ அறிமுகம்<br>➢ அடிப்படை தொடர்பாடல் மாதிரிகள்<br>1. அரிஸ்டோட்டிலின் மாதிரி<br>2. லாஸ்வெல்லின் மாதிரி<br>3. குளொட் ஷனொன் மற்றும் வொரன் வீவரின் மாதிரி | • தொடர்பாடல் மாதிரிகளை இனங்கண்டு முன்வைப்பார்.<br>• தொடர்பாடல் செயற்பாடு நிகழும் விதத்தை மாதிரியூடாக விளக்குவார். | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள |
|---|---|---|---|---|
| 4.0 பாரம்பரிய ஊடகம், வெகுசன ஊடகம் மற்றும் புதிய ஊடகம் பற்றிய கருத்துக்களைக் கலந்துரையாடி மற்றும் அவற்றின் விசேட இயல்புகளை அறிந்து அவற்றைப் பொருத்தமான தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவார். | 4.1 பாரம்பரிய ஊடகம் என்றால் என்ன எனக் கலந்துரையாடி அவற்றின் விசேட இயல்புகளைத் தெளிவுபடுத்துவார். | 4. **பாரம்பரிய ஊடகம் மற்றும் வெகுசன ஊடகம், புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகம்**<br>• பாரம்பரிய ஊடக அறிமுகம் மற்றும் விசேட இயல்புகள் | • பாரம்பரிய ஊடகம் என்றால் என்ன எனக் கலந்துரையாடு வார்.<br>• பாரம்பரிய ஊடக வழிமுறை களைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• பாரம்பரிய ஊடகத்தின் அவசியத்தை விபரிப்பார். | 08 |
| | 4.2 வெவ்வேறு வெகுசன ஊடக வகைகளை இனங்கண்டு இவற்றின் விசேட இயல்புகளைப் பகுப்பாய்வு செய்வார். | • வெகுசன ஊடக அறிமுகம் மற்றும் விசேட இயல்புகள்<br>• வெகுசனத் தொடர்பாடல் மாதிரி - HUB மாதிரி | • வெகுசன ஊடகம் என்றால் என்ன எனக் கலந்துரையாடுவார்.<br>• வெகுசன ஊடகத்தின் விசேட இயல்புகளை விபரிப்பார்.<br>• வெகுசனத் தொடர்பாடல் மாதிரியை உதாரணங்களுடன் விபரிப்பார். | 16 |
| | 4.3 புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகங்களை இனங்கண்டு அவற்றின் சமூகச் செயற்பாடு களைத் தெளிவுபடுத்துவார். | • புதிய ஊடக அறிமுகம் மற்றும் விசேட இயல்புகள்<br>• சமூக ஊடக அறிமுகம் மற்றும் விசேட இயல்புகள் | • புதிய ஊடகம் என்றால் என்ன என இனங்கண்டு முன்வைப்பார்.<br>• புதிய ஊடகத்தின் செயற்பாடு களைத் தெளிவுபடுத்துவார்.<br>• சமூக ஊடகம் என்றால் என்ன என விபரிப்பார்.<br>• புதிய ஊடகத்தின் செயற்பாடு களைத் தெளிவுபடுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.4 புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் தேர்ச்சிகளை வெளிப்படுத்துவார். | • புதிய ஊடக ஆற்றல், தேர்ச்சி மற்றும் பயன்பாடு<br>• சமூக ஊடக ஆற்றல், தேர்ச்சி மற்றும் பயன்பாடு | • புதிய ஊடக ஆற்றல் மற்றும் தேர்ச்சியைப் பயன்படுத்தித் தகவல் தயாரித்து முன்வைப்பார்.<br>• சமூக ஊடக ஆற்றல் மற்றும் தேர்ச்சியைப் பயன்படுத்தித் தகவல் தயாரித்து முன்வைப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 பண்பாடு என்பதன் விளக்கத்தைப் பெற்று, ஊடகச் செயற்பாடுகளால் பண்பாட்டில் ஏற்படும் மாற்றம் மற்றும் தாக்கம் பற்றிய அறிவுடன் விமர்சனரீதியில் செயற்படுவார். | 5.1 பண்பாடு, அதன் இயல்புகள் மற்றும் விசேட அம்சங்கள் என்பவற்றை விளக்குவார். | 5. **பண்பாட்டு விளக்கம், ஊடகத்தின் இயல்பு மற்றும் அதன் தாக்கம்**<br>• அறிமுகம்<br>- பண்பாடு என்றால் என்ன?<br>- பண்பாட்டின் இயல்புகள் மற்றும் விசேட அம்சங்கள் | • பண்பாடு என்றால் என்ன எனத் தெளிவுபடுத்துவார்.<br>• பண்பாட்டின் இயல்புகள் மற்றும் விசேட அம்சங்கள் பற்றி விபரிப்பார். | 08 |
| | 5.2 பண்பாட்டுக் கற்கையின் மூலம் பண்பாடுகள் இடையேயான பல்வகைமை யினை ஒப்பீட்டடிப்படையில் விபரிப்பார். | • **பண்பாட்டுக் கற்கை**<br>– பாரம்பரியப் பண்பாடு<br>- வெகுசனப் பண்பாடு<br>- ஊடகப் பண்பாடு<br>- பிரசித்தமான பண்பாடு<br>- பூகோளப் பண்பாடு<br>- பண்பாட்டிடைக்கற்கைகள் | • ஊடக வளர்ச்சியோடு பண்பாடு மாற்றம் பெற்றமையைத் தெளிவுபடுத்துவார்.<br>• இப் பண்பாட்டின் பல்வகைமை யினை மற்றும் விசேட இயல்பு களை வெவ்வேறாக விபரிப்பார். | 24 |
| | 5.3 பண்பாட்டில் ஊடகங்கள் செலுத்தும் தாக்கம் பற்றிய தகவல்களைப் பகுப்பாய்வு செய்து முன்வைப்பார். | • ஊடகத் தாக்கம்<br>- அறிமுகம்<br>- கோட்பாட்டு அடிப்படை<br>• பண்பாட்டில் ஊடகங்கள் செலுத்தும் தாக்கம்<br>- எண்ணங்கள்<br>- நடத்தை<br>- வன்முறை<br>- பண்பாட்டு அதிர்ச்சி<br>- பேராசை | • ஊடகத் தாக்கம் பற்றி விளக்கு வார்.<br>• பண்பாட்டில் ஊடகங்கள் செலுத் தும் தாக்கம் பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்களை முன் வைப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0 | 6.1 ஊடக விளங்கறிவு என்றால் என்ன எனும் விளக்கத்துடன் ஊடக விளங்கறிவின் அடிப் படைக்கூறுகளைப் பரீட்சிப்பார். | 6. **ஊடக விளங்கறிவு மற்றும் ஊடக விமர்சனம்**<br>• ஊடக விளங்கறிவு<br>- அறிமுகம்<br>- விளங்கறிவு என்றால் என்ன?<br>- ஊடக விளங்கறிவு<br>- ஊடக விளங்கறிவின் வரைவிலக்கணம்<br>- ஊடக விளங்கறிவின் அடிப் படைக்கூறுகள்<br>1. ஊடகத்தகவல் செயற்பாட்டை அறிந்து கொள்ளும் ஆற்றல்.<br>2. ஊடகத் தகவல்களின் தாக்கத்தை இனங்காணும் ஆற்றல்.<br>3. ஊடகத் தகவல்களைப் பகுப் பாய்வு செய்யும் மற்றும் அது தொடர்பில் விவாதங்களை நிகழ்த்தும் ஆற்றல்.<br>4. ஊடகத் தகவல்களை உணரும் / நுகரும் ஆற்றல்.<br>5. ஊடகத் தகவல்களை மதிப் பிடும் ஆற்றல்.<br>6. அனைத்து ஊடகத் தகவல் களினதும் உட்கருத்துக் களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல். | • விளங்கறிவு என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• ஊடக விளங்கறிவு என்பதன் விளக்கத்தை வரைவிலக்கணங்கள் மூலம் தெளிவுபடுத்துவார்.<br>• ஊடக விளங்கறிவின் அடிப் படைக் கூறுகளை விபரிப்பார்.<br>• ஊடகவிளங்கறிவின் அவசியத்தை அறிந்து அதனைப் பிரயோகம் செய்வதன் அவசியத்தை முன் வைப்பார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2 ஊடக விமர்சனம் மற்றும் அதனோடு தொடர்புடைய அம்சங் களை இனங்கண்டு விமர்சன ரீதியான பெறுகையின் சிறப்பை விபரிப்பார். | • ஊடக விமர்சனம்<br>- அறிமுகம்<br>- ஊடக விமர்சனம் என்றால் என்ன?<br>1.ஊடகம் மற்றும் அன்றாட வாழ்க்கை<br>2.ஊடகம் மற்றும் பல்வேறு கருத்தியல்கள்<br>3.ஊடகம் மற்றும் தகவல்களின் ஒற்றுமை மற்றும் வேற்றுமை<br>4.ஊடகத் தகவலின் ஆதிக்கம்<br>5.ஊடகப் பொருளாதாரம்<br>6.ஊடகம் மற்றும் தொழினுட்பம்<br>7.ஊடகம் மற்றும் பண்பாடு<br>8.ஊடகம் மற்றும் மாயை | • ஊடக விமர்சனம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• ஊடக விமர்சனத்தின் அவசியத்தை விபரிப்பார்.<br>• ஊடக விமர்சனத்தோடு தொடர் புடைய பல்வேறு அம்சங்களை விளக்குவார்.<br>• தெரிவு செய்த ஊடகத் தகவலொன்றை விமர்சனத்திற் குட்படுத்துவார்.<br>• விமர்சனரீதியான பெறுநர் என் பவர்யார் என்பதை விளக்குவார்.<br>• விமர்சனரீதியான பெறுநர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை விபரிப்பார். | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3 ஊடகத் தகவல் பகுப்பாய்வு தொடர்பான அறிவுடன் விமர்சன ரீதியாகச் செயற்படுவார். | • ஊடகத் தகவல்களைப் பகுப் பாய்வு செய்தல்<br>- அர்த்தம் **Meaning**<br>- பொருத்தப்பாடு **Appropriateness**<br>- தூண்டல் **Motivation**<br>- பக்கச்சார்பு **Bias**<br>- நம்பகத்தன்மை **Credibility**<br>- திரிபுபடுத்தல் **Distortion**<br>- வினைத்திறன் **Effectiveness**<br>- கையாளுதல் **Manipulation**<br>- மாறாத்தன்மை **Stereotyped**<br>- மதிப்பீடு **Evaluation** | • ஊடகத் தகவலொன்றைப் பகுப்பாய்வு செய்யும் போது பயன்படுத்தும் அடிப்படை அம்சங்களை விபரிப்பார்.<br>• தெரிவு செய்த ஊடகத் தகவலொன்றைப் பகுப்பாய்வு செய்வார். | 22 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 படைப்பாக்க ரீதியான தொடர் பாடல், அதன் அடிப்படைக்கூறுகள் மற்றும் அவசியம் என்பவை பற்றிய தெளிவுடன் வெவ் வேறு ஊடகங் களுக்குப் பொருத்தமான தகவல் தயாரிப் பின் போது அவற்றை உபயோகிப்பார். | 7.1 படைப்பாக்கரீதியான தொடர் பாடல் மிகவும் பயனுறுதியுள்ள தொரு தொடர்பாடல் முறை என்பதை விபரிப்பார். | **2. படைப்பாக்கரீதியான தொடர் பாடல்**<br>• அறிமுகம்- படைப்பாக்கரீதியான தொடர் பாடலின் இயல்பு<br>- அவசியம், முக்கியத்துவம் | | 16 |
| | 7.2 படைப்பாக்கத்தின் அடிப்படைக் கூறுகளைக் கற்று அவற்றைச் சமயோசிதமாகப் பயன்படுத்துவார். | • படைப்பாக்கத்தின் மூலக் கூறுகள்<br>- படைப்பு/ படைப்பாக்கத்திறன்<br>- படைப்பாக்கச் சிந்தனை<br>- படைப்பாக்குநர்<br>- படைப்பாக்க இரசனை | • படைப்பாக்கரீதியான தொடர் பாடல் என்பதற்குரிய விளக் கத்தை முன்வைப்பார்.<br>• படைப்பாக்கரீதியான தொடர் பாடலின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்துவார்.<br>• படைப்பாக்கத்தின் மூலக்கூறுகள் பற்றிய போதிய விளக்கத்துடன் அவற்றை விபரிப்பார்.<br>• சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெவ் வேறு ஊடகங்களுக்குப் படைப் பாக்க ரீதியான தகவல்களை வழங்குவார். | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.3 படைப்பாக்க மொழிப் பாவனை மற்றும் வெவ்வேறு ஊடகங்களின் படைப்பாக்கத் திறன் பற்றிக் கருத்துத் தெரிவிப்பார் | • தொடர்பாடலும் படைப்பாக்கத் திறனும்<br>- படைப்பாக்கரீதியான மொழிப் பாவனை<br>- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் படைப்பாக்கத் திறன்<br>- சினிமா மற்றும் படைப்பாக்கம்<br>- படைப்பாக்க நாடகக் கலைப் பயன்பாடு | • தொடர்பாடலின் போது மொழியைப் படைப்பாக்க ரீதியில் பயன் படுத்தலாம் என்பதை விபரிப்பார்.<br>• மொழியைப் படைப்பாக்க ரீதியில் பயன்படுத்தி வெவ்வேறு ஊடகங்களுக்கு வழங்கக்கூடிய தகவல்களைத் தயாரிப்பார். | 10 |
| | 7.4 தகவலொன்றைப் படைப்பாக்க ரீதியில் தயாரிக்க நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை வடிவங்களைப் பயன்படுத்தலாம் எனும் தெளிவுடன் வெவ்வேறு ஊடகங்களுக்கான படைப்பாக்கத் தகவல் தயாரிப்பில் ஈடுபடுவார். | • நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை பற்றிய படைப்பாக்க ரீதியான தொடர்பாடல்விளக்கம | • தொடர்பாடல் செயற்பாட்டின் போது நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை வடிவங்களைப் படைப்பாக்க ரீதியில் பயன்படுத்தலாம் என்பதை விபரிப்பார்.<br>• சமயோசிதமாக நாட்டாரியல் மற்றும் நாட்டார் கலை வடிவங்களைப் படைப்பாக்க ரீதியில் தம் வாழ்வில் பயன்படுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 பொதுமக்கள் தொடர்பு மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் என்பது ஓர் பிரயோகப் பாடம் என்பதைக் கற்றுத் தம் வாழ்நாள் செயற்பாடுகளில் தாம் கற்றவற்றைப் பிரயோகிப்பார். | 8.1 பொதுமக்கள் தொடர்பு, அதன் ஆரம்பம், முக்கியத்துவம் மற்றும் அவசியத்தைப் பரிசீலனை செய்வார். | 8. **பொதுமக்கள் தொடர்பு மற்றும் நிகழ்வு முகாமைத்துவம்**<br>• அறிமுகம்<br>- பொதுமக்கள் தொடர்பு ஆரம்பப் பின்னணி<br>- அவசியம் மற்றும் முக்கியத்துவம் | • பொதுமக்கள் தொடர்பு ஆரம்பிப்பதற்குக் காரணமான காரணிகளை விபரிப்பார்.<br>• பொதுமக்கள் தொடர்பின் அவசியம் மற்றும் முக்கியத் துவத்தை விபரிப்பார். | 04 |
| | 8.2 பொதுமக்கள் தொடர்பு என்பதை வரைவிலக்கணப் படுத்துவார். | • பொதுமக்கள் தொடர்பு வரை விலக்கணம் | • பொதுமக்கள் தொடர்பு என்பதை வரைவிலக்கணப்படுத்துவார். | 04 |
| | 8.3பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப் பங்கள் பற்றிய தெளிவுடன் அவற்றை விபரிப்பார். | • பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்கள்<br>- அரச பொதுமக்கள் தொடர்பு<br>- நிறுவன பொதுமக்கள் தொடர்பு<br>- தொழில்சார் பொதுமக்கள் தொடர்பு<br>- வியாபாரம் மற்றும் பொது மக்கள் தொடர்பு | • பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப் பங்களை உதாரணங்களுடன் விபரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.4 பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகளை அறிந்து பயன்படுத்துவார். | - ஊடகம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு<br>• பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகள். | • பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகளை வேறுபடுத்தி அறிந்து அவற்றை விபரிப்பபர்.<br>• தேவையான சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் மற்றும் செயலொழுங்குகளைப் பயன்படுத்துவார். | 06 |
| | 8.5 பொதுமக்கள் தொடர்பு அலுவலரின் கடமைகளை விபரிப்பார். | • பொதுமக்கள் தொடர்பு அலுவலரின் கடமைகள்<br>• ஊடக அலுவலர் மற்றும் பொதுமக்கள் தொடர்பு | • பொதுமக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் அவரின் கடமைகளை விமர்சனரீதியில் முன்வைப்பார்.<br>• ஊடக அலுவலரின் பொதுமக்கள் தொடர்புக் கடமைகளை விபரிப்பார். | 06 |
| | 8.6 நிகழ்வு முகாமைத்துவத்தை வரைவிலக்கணப்படுத்துவார். | • நிகழ்வு முகாமைத்துவம்<br>- அறிமுகம்<br>- வரைவிலக்கணம்<br>- அவசியம் மற்றும் முக்கியத்துவம் | • நிகழ்வு முகாமைத்துவம் என்றால் என்ன என விபரிப்பார்.<br>• நிகழ்வு முகாமைத்துவத்தின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை விபரிப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.7 நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப் பங்களை இனங்கண்டு தாம் கற்ற நிகழ்வு முகாமைத்துவ அறிவைப் பிரயோகம் செய்வார். | • நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப் பங்கள்<br>- சந்தர்ப்பங்களை இனங்காணல்<br>- நிகழ்வு முகாமைத்துவத்தின் வகிபாகம்<br>- திட்டமிடல்<br>- செயலொழுங்கு<br>- வேலை அட்டவணை அனுசரணை | • நிகழ்வு முகாமைத்துவம் என்றால் என்ன என விபரிப்பார்.<br>• நிகழ்வு முகாமைத்துவச் சந்தர்ப் பங்கள் பற்றிய தெளிவுடன் நிகழ்வு முகாமைத்துவத் திட்ட மொன்றைத் தயாரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 அபிவிருத்திக்காகத் தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் ஆரம்பம், வீச்சு, அவசியம் மற்றும் புதிய போக்கு களை இனங் கண்டும் அதற்கு ஏற்றாற்போல் அறிவு, எண்ணம், நடத்தை மாற்றம் பெறவேண்டிய விதத்தைப் பற்றிய தெளிவுடன் அபிவிருத்தித் தகவலைத் தயாரிக்கும் திறன் பெறுவார். | 9.1 அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களைப் பகுத்தாய்வர். | 9. **அபிவிருத்திக்காகத் தொடர்பாடல்**<br>• அறிமுகம்<br>- அபிவிருத்தியின் வரைவிலக் கணம், தோற்றம் மற்றும் வீச்சு<br>- அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பான கருத்தியல்கள்<br>- அபிவிருத்தி எண்ணக்கருவின் புதிய போக்குகள் | • அபிவிருத்தி எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• அபிவிருத்தி எண்ணக்கருவின் வரலாற்று ரீதியான வீச்சை விபரிப்பார்.<br>• அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பான கருத்தியல்களை ஒப்பிட்டறிவார்.<br>• அபிவிருத்தி எண்ணக்கருவின் புதிய போக்குகளை அடையாளம் காட்டுவார். | 10 |
| | 9.2 அபிவிருத்தி எண்ணக்கருவின் நவீன இயல்புகளை இனங்கண்டு தெளிவுபடுத்துவார். | • அபிவிருத்தி எண்ணக்கருவின் இயல்புகள்<br>- மக்கள் மயமாதல்<br>- பிரதேசமயமாதல்<br>- சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தின் அடிப் படையில் எழுவது<br>- வறுமையை இழிவளவாக்குதல்<br>- கொள்கைத் தயாரிப்பில் பொதுமக்கள் ஈடுபடல் | • அபிவிருத்தி எண்ணக்கருவின் இயல்புகளை விபரிப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3 அபிவிருத்திக்காகத் தொடர் பாடலின் அவசியத்தை விமர்சன ரீதியாக முன்வைப்பார். | • அபிவிருத்திக்காகத் தொடர் பாடலின் அவசியம்<br>- ஊடகத்தைத் தரமுயர்த்தல் (Quality improvement)<br>- பங்குபற்றல்மற்றும் ஆளிடைத் தொடர்புகளை வலுப்படுத்தல்<br>- அடிப்படை மனிதாபிமானத் தகவல் வழங்குதல்<br>- மறுசீரமைப்புகளுக்குள்ளாதல்<br>- நிலையான அபிவிருத்தி | • அபிவிருத்திக்காகத் தொடர் பாடலின் அவசியத்தைத் தெளிவுபடுத்துவார். | 10 |
| | 9.4 அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகளை இனங்கண்டு விபரிப்பார். | • அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகள்<br>- தேவைகளை மையப்படுத்தல்<br>- சுய தீர்மானம்<br>- சுய நம்பிக்கை<br>- சிறந்த சூழலை உருவாக்குதல்<br>- பங்குபற்றல் ஜனநாயகம் (Participatory democracy) | • அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகள் பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்களை முன் வைப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0 ஊடகக் கொள்கைகள், ஊடக வரையறைகள், வெகுசன ஊடக ஒழுக்க நெறிகள் மற்றும் வழிகாட்டிகள் மூலமாக ஊடகங்களின் வரையறைகள் காட்டப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து விமர்சன ரீதியாகச் செயற்படுவார். | 10.1 தொடர்பாடல் கொள்கைகள் பற்றித் தெளிவுபடுத்துவார். | 10. **தொடர்பாடல் கொள்கைகள் மற்றும் ஊடக வரைமுறைகள்**<br>• தொடர்பாடல் கொள்கைகள்<br>- அறிமுகம்<br>- மனித உரிமைகள் தொடர்பான உலக வெளியீடு<br>- அரசியல் யாப்பு<br>- வெகுசன ஊடகச் சுதந்திரம்<br>- புலமைச் சொத்துக்கள் சட்டம்/ உரிமை<br>- தகவலறியும் உரிமைச் சட்டம்/ தகவலறியும் உரிமை | • தொடர்பாடல் கொள்கைகளை விபரிப்பார்.<br>• பேச்சு மற்றும் எழுத்துத் தொடர்பான அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்து அவற்றை விபரிப்பார்.<br>• ஊடக சுதந்திரத்தின் அர்த்தத்தை விபரிப்பார்.<br>• ஊடக சுதந்திரம் தொடர்பில் விமர்சனரீதியான கருத்துக் களைத் வெளிப்படுத்துவார்.<br>• புலமைச் சொத்துக்கள் சட்டம் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பார்.<br>• தகவலறியும் உரிமை மற்றும் அதன் அவசியத்தைத் தெளிவு படுத்துவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.2 ஊடக வரையறைகளை வரை விலக்கணப்படுத்தி அதன் அவசியம், விசேட இயல்புகள், ஊடக வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளைப் பகுத்தாய்வார். | • ஊடக வரையறைகள்<br>- அறிமுகம்<br>- ஊடக வரையறைகளின் வரலாறு<br>- அவசியம்<br>- வரையறைகள்<br>- ஊடகத் தணிக்கை<br>- ஊடக வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற் பாடுகள்<br><br>✓ இலங்கைத் தொலைத் தொடர் புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு<br>✓ இலங்கை கனனி அவசர இயக்கம் (SLCERT)<br>✓ இலங்கைப் பத்திரிகை பேரவை<br>✓ தணிக்கைச் சபை<br>✓ இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு | • ஊடக வரையறைகளை இனங் கண்டு தெரிவிப்பார்.<br>• ஊடக வரையறைகளின் வரலாறு பற்றி அறிந்து விளக்குவார்.<br>• ஊடக வரையறைகளின் அவசியம் மற்றும் அவற்றின் விசேட இயல்புகளை விபரிப்பார்.<br>• ஊடகத் தணிக்கை பற்றிய கருத்துக்கள் தெரிவிப்பார்.<br>• ஊடக வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுவார்.<br>• ஊடக வரையறைகளை நிறுவும் நிறுவனங்கள் சிலவற்றின் செயற்பாடுகளைக் குறிப்பிடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.3 வெவ்வேறு ஊடகங்களுக்கும் வெகுசன ஊடக ஒழுக்க நெறி கள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளதென அறிந்து அவற்றின் அவசியம் பற்றிய கருத்துக்கள் தெரிவிப்பார். | • ஊடக ஒழுக்க நெறிகள் மற்றும் வழிகாட்டல்கள்<br>- செய்திப்பத்திரிகை<br>- வானொலி<br>- சினிமா மற்றும் நாடகக் கலை<br>- தொலைக்காட்சி<br>- புதிய ஊடகம் | • ஊடக ஒழுக்க நெறிகள் gwywpa f Uj ;J j ; nj up pgghu;<br>• ஊடக வழிகாட்டல் என்றால் என்ன என அறிந்து விபரிப்பார்.<br>• ஊடக வழிகாட்டல்களின் அவசியம் பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 இலங்கையில் ஊடகப் பரவல் மற்றும் ஊடகப் போக்குகள் பற்றிய அறிவைப் பெற்றுச் செயற்படுவார். | 11.1 இலங்கையில் சமகால ஊடகப் பரவல் பற்றி அறிந்து கருத்துத் தெரிவிப்பார். | **11. சமகால ஊடகப் போக்குகள்**<br>• இலங்கையின் ஊடகம் பற்றிய அறிமுகம் | • இலங்கையின் ஊடகப் பரவல் பற்றிய முறைசார் அட்டவணை யொன்றைத் தயாரிப்பார்.<br>• இலங்கையின் ஊடகப் பரவல் பற்றி விபரிப்பார். | 12 |
| | 11.2 சமகால ஊடகப் போக்குகள் பற்றிப் பகுத்தாய்வார். | • ஊடகப் போக்குகள்<br>- ஊடகக் குவிகை<br>- ஊடக மறுசீரமைப்பு<br>- ஊடகக் கட்டுப்பாட்டு விலகுகை<br>- சந்தைமயப்படுத்தல்<br>- நுகர்வுமயப்படுத்தல்<br>- வணிக மயப்படுத்தல்<br>- கோளமயப்படுத்தல் | • ஊடகப் போக்குகள் பற்றி விபரிப்பார்.<br>• ஊடகப் போக்குகள் பற்றிய எண்ணக்கருக்களை உதாரணங் களுடன் விளக்குவார். | 12 |
| | 11.3 இலங்கைக்குரிய விசேட ஊடகப் போக்குகள் பற்றிய கருத்துக்கள் தெரிவிப்பார். | • இலங்கைக்குரிய விசேட ஊடகப் போக்குகள்<br>- தொழினுட்பம் சார்<br>- நிறுவனம் சார்<br>- உள்ளடக்கம்<br>- பெறுநர் | • ஊடகப் போக்குகள் பற்றிய எண்ணக்கருக்களில் இலங்கைக் குரியவற்றை விபரிப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 12.0 ஆய்வுச் செயற் பாட்டை முறை யாகக் கற்று அதன் மூலம கிடைக்கும் அறிவை வாழ்வில் பிரயோகிப்பார். | 12.1 தொடர்பாடல் மற்றும் ஊடக ஆய்வு பற்றிக் கருத்துத் தெரிவிப்பார். | **12. தொடர்பாடல் ஆய்வு**<br>• அறிமுகம்<br>- தொடர்பாடல் மற்றும் ஊடக ஆய்வு<br>- ஆய்வு<br>- ஆய்வு முறையியல்<br>- ஆய்வு வழிமுறைகள் (Types)<br>- ஆய்வு செய்வதன் நன்மை மற்றும் தீமை | • ஆய்வு பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.<br>• ஊடக ஆய்வின் அர்த்தத்தை உள்வாங்குவார்.<br>• ஆய்வின் நன்மை மற்றும் தீமையை விபரிப்பார். | 16 |
| | 12.2 தொடர்பாடல் ஆய்வுச் செயற் பாட்டைப் பின்பற்றி எளிய ஆய் வொன்றில் ஈடுபடுவார். | • தொடர்பாடல் ஆய்வு முறையியல்<br>- அறிமுகம்<br>- பிரச்சினையை இனங்காணல்<br>- நோக்கம்<br>- ஆய்வின் வழிமுறையைத் தெரிவு செய்தல்<br>- தகவல் திரட்டல்<br>- தகவல் பகுப்பாய்வு செய்தல்<br>- அனுமானங்களை மேற்கொள்ளல்<br>- அறிக்கையிடல் மற்றும் முன் வைத்தல | • ஆய்வின் படிமுறைகளை வரிசைக்கிரமத்தில் விபரிப்பார்.<br>• ஆய்வின் படிமுறைகளை பின் பற்றி ஆய்வொன்றில் ஈடுபடுவார். | 18 |

## பாடசாலைக் கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்கள்

தொடர்பாடல் கற்கைகள் மனித வாழ்வில் மிகவும் நெருக்கமான, நேரடியான மற்றும் பிரயோகரீதியான ஓர் துறையாகும். இப்பாட விதானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைப் பின்பற்றும் மாணவரது நடத்தையில் ஓர் சிறந்த தொடர்பாடுனருக்குரிய குணாதிசியங்களைச் சமூகத்திற்கு வெளிக்காட்ட முயற்சி செய்யவேண்டும். அதற்காகப் பாடசாலை மட்டத்திற்குப் பொருத்தமான பிரயோகக் கற்றற் செயற்பாடுகளை வழங்க ஆசிரியர்கள் முனையவேண்டும். கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்குறித்த விடயத்திற்குத் துணைபுரியும்.

- பாடசாலை மட்டத்தில் ஊடக சமூகத்தை உருவாக்குதல்.
- மாணவர்களை அவ் ஊடக சமூகங்களில் வினைத்திறன்மிக்க வகையில் செயற்பட ஊக்குவித்தல்.
- ஊடக நாள் / ஊடக வாரம் முதலான நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல்.
- சுவர் பத்திரிகை, வருடாந்த வெளியீடுகள் பிரசுரித்தல் முதலான செயற்பாடுகளை ஆரம்பித்தல்.
- தொடர்பாடல் துறைசார் நிபுணர்கள், நிறுவனங்களைத் தொடர்புகொண்டு,

    - விரிவுரை
    - பயிற்சிப் பட்டறை
    - கலந்துரையாடல்
    - ஆராய்ச்சி
    - ஆய்வுசார் கற்கைகள்
    - பாடம் சார்ந்த சுற்றுலாக்களை ஏற்பாடுசெய்தல்

- எளிய தகவல் ஆய்வு, அறிக்கையிடல் முதலான செயற்பாடுகளை வழங்குதல்.
- படைப்பாக்கரீதியான செயற்பாடுகள்,

    - வலைப்பூக்கள் உருவாக்குதல்.
    - சுருக்கமான முறையில் ஓர் எளிமையான அறிக்கையிடல் நிகழ்ச்சி.
    - ஒலி-ஒளிப்பதிவு (வானொலி, தொலைக்காட்சி)
    - எழுத்து ஆவணத் தயாரிப்பில் மாணவரை ஈடுபடுத்தல், பொருத்தமான மதிப்பிடல்களை மேற்கொள்ளல்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

இப்பாட விதானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சை தேசிய மட்ட மதிப்பீடாகும்.

பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படும் தவணையிறுதி, வருட இறுதிப் பரீட்சைகள் பாடசாலையால் உரிய முறையில் ஏற்பாடுசெய்யப்படவேண்டும்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் மற்றும் தவணைப் பரீட்சைகள் மூலம் நியமிக்கப்பட்ட தேர்ச்சி மற்றும் தேர்ச்சி மட்டங்களுக்குப் பொருத்தமான வகுப்பறைமட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டும். ஆசிரியர் வழிகாட்டியில் இதுதொடர்பான அடிப்படை வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களது படைப்பாக்கத்திறனைப் பயன்படுத்தி இம் மதிப்பீட்டு முறைகளை மேலும் ஆக்கபூர்வமானதாக்கலாம்.

## பாடவிதானக் குழு

**எழுத்தாளர் குழு (உள்வாரி)**

| | | |
|---|---|---|
| எம்.ஆர்.டப்ளியு.மத்தும | பணிப்பாளர் | சிங்கள மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை |
| பீ.டி.எம்.ரத்னாயக்க | சிரேஷ்ட விரிவுரையாளர் | சிங்கள மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை |
| கலாநிதி வாவின்னே பஞ்ஞானந்த தேரர் | உதவி விரிவுரையாளர் | சிங்கள மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | | |
|---|---|---|
| பேராசிரியர் சுனந்த மகேந்திர | வாழ்நாள் பேராசிரியர் | களனிப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி மகிம் மெண்டிஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் ஆரியரத்ன அதுகல | சிரேஷ்ட விரிவுரையாளர் | களனிப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் கமல் வலேபொட | பேராசிரியர் | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் தியடோர் பெர்ணாந்து | பேராசிரியர் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| கலாநிதி டியுடர் வீரசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர் | ஸ்ரீபாளி வளாகம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி எஸ். ரகுராம் | சிரேஷ்ட விரிவுரையாளர் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| எம.ஏ.எஸ்.ஹரிச்சந்திர | சிரேஷ்ட விரிவுரையாளர் | ஸ்ரீஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் |
| மிகிரி குமாரகே | ஆசிரியர் | தூய பேதுறு மகாவித்தியாலயம், ஹொரண |
| பிரசன்ன விமலசூரிய | ஆசிரியர் | தொடங்கொல்ல மகாவித்தியாலயம், பிபில |
| இந்தீவரி ஜயசேகர | ஆசிரியர் | ஆனந்த மகளிர் வித்தியாலயம், கோட்டே |